# ஜனவிநோதினி.

இல. 4. . ஏப்ரல்மீ 1871. புஸ்த. II.

## ஆபிரிக்கா பிரயாணம்.

(தொடர்ச்சி.)

1795–ம்வூ டிசெம்பர்மீ 2உ மேஸ்டர் பார்க்கென்பவர் டாக்டர் லேயிட்லிதுனா வீட்டைவிட்டுத் தம் பிரயாணத்தைத் தொடங்கும்பொருட்டுப் புறப்பட்டார். இப்படி அவர் பீசானியாவென்னும் பட்டணத்திலிருந்து புறப்படுகையில் மாண்டிங்கோ பாஷையையும் அங்கிலேய பாஷையையும் அறிந்திருந்த ஜான்சன் என்ற பெயருள்ள நீக்ரோ வேலைக்காரன் ஒருவனையும், ஆபிரிக்கானருக்குள் ஓர் விசேஷித்த வகுப்பாரான சிராவூலி என்னும் ஜாதியாரின் வழக்கங்கள் பாஷை முதலியவற்றை அறிந்த டேம்பா என்னும் ஓர் ஆபிரிக்கா வாலிபனையும் தமக்குதவியாக இட்டுக்கொண்டுபோனார். மேஸ்டர் பார்க்கென்பவருக்கு ஓர் குதிரையும், அவருடைய வேலைக்காரர் இருவருக்கும் இரண்டு கோவேறு கழுதைகளும் ஆக மூன்று ஜந்துக்கள் அவர்கள் ஏறிப் பிரயாணஞ்செய்வதற்கு ஆயத்தமாயிருந்தன. அவர் தம்முடன் கொண்டுபோவதற்கு ஆயத்தஞ்செய்திருந்த சாமான்கள் எவையெனில்: இரண்டுநாளைக்குப் போதுமான போஜனபதார்த்தங்கள், கொஞ்சம் பாசிமணிகள், கொஞ்சம் அம்பர், கொஞ்சம் புகையிலை, சில வஸ்திரங்கள், ஓர் குடை, தாம் போகுந் திக்குகளைத் தெரிந்துகொள்ளும்பொருட்டாக திசையறிகாந்தக்கருவியொன்று; தாம் செய்யும் பிரயாணங்களில் அப்போதைக்கப்போது தாம் சேருமிடம் பூமியின் எப்பாகத்திலுள்ளதென அறிந்துகொள்வதற்கு உதவியான செக்ஸ்டான்ட் என்னும் ஸ்தானமறிகருவியொன்று, தாம் போகுமிடங்களிலுள்ள சீதள உஷ்ண

வேறுபாடுகளைத் திட்டமாய்த் தெரிந்துகொள்வதற்காக உஷ்ண மறிகருவியொன்று, நான்கு கைத்துப்பாக்கிகள், குருவிவேட்டையாடுவதற்கு இரண்டு பெரிய துப்பாக்கிகள் ஆகிய இவைகளும், பின்னுஞ் சில்லரைச் சமான்கள் சிலவற்றுமே. மேஸ்டர் பார்க்கென்பவர் பிரயாணப்படுகையில் அவர் போகும் திசையாய் வெவ்வேறிடங்களுக்குத் தங்கள் சொந்தக்காரியமாகப் பிரயாணம் போகும் அடிமை வர்த்தகர் முதலான சில பிரயாணிகள் அவருக்கு வழித்துணையாக வந்து கூடினார்கள். டாக்டர் லேயிட்லி துரையும், பின்னும் சில ஐரோப்பிய சிநேகிதர்களும் பார்க்கென்பவரோடு இரண்டுநாள் தூரமட்டும் கூடப்போய் வழிவிட்டனுப்பத் தீர்மானித்துப் புறப்பட்டார்கள். இவர்கள் யாவரும் பீசானியா என்னும் பட்டணத்தை விட்டுப் புறப்பட்ட அன்றுதினமே ஜின்டே என்னும் ஊரைச்சேர்ந்து, அவ்விடத்தில் சிஞோரியா என்னும் நாமமுள்ள பிரபலமான ஓர் ஆபிரிக்கா ஸ்திரீயின் வீட்டில்போய்த் தங்கினார்கள். அன்று சாயந்தரமே அப்பிராந்தியங்களிலுள்ள வர்த்தகர்களிலெல்லாம் அதிக ஐசுவரியமுள்ளவனை ஒரு தனவந்தனுக்குச் சொந்தமானதும், ஜின்டே பட்டணத்திற்குச் சமீபித்ததுமான ஓர் கிராமத்தைச் சுற்றிப்பார்க்கும்பொருட்டு பார்க்கென்பவர் புறப்பட்டுப்போனார். அவ்வர்த்தகன் தன்னுடைய கிராமத்திற்கு மேஸ்டர் பார்க்கென்பவர் வந்ததினிமித்தம் மிகவும் சந்தோஷப்பட்டு, அவருக்கு வெகுமதியாக நேர்த்தியான ஓர் மாட்டைக் கொடுத்தான். அதை உடனே அடித்து, அதில் ஓர் பாகத்தை அன்று இராவிருந்துக்கு ஆயத்தப்படுத்தினார்கள். நீக்ரோ ஜாதியார் இராச்சாப்பாட்டை வெகுநேரம் பொறுத்துத்தான் சாப்பிடுகிற வழக்கம். ஆகையால் அன்று இராவிருந்து ஆயத்தமாகிக்கொண்டிருக்கையில், ஆபிரிக்கானர்களில் சிலர், மேஸ்டர் பார்க்கென்பவருடன் பல சங்கதிகளைப்பற்றிப் பேசி நேரம் போக்கிக்கொண்டிருந்தார்கள். அப்போது மாண்டிங்கோ ஜாதியானொருவன் பின்வரும் வேடிக்கையான சரித்திரத்தைச் சொல்லி யாவரும் மிகச் சிரிக்கும்படி செய்தான். அதென்னவெனில்: தூமசேனு என்னும் ஓர் கிராமத்தில் இரவுதோறும் ஓர் சிங்கமானது வந்து விழுந்து ஆடுமாடு முதலிய சீவஜந்துக்களைப் படுநாசம் பண்ணிக்கொண்டுவந்ததினால், அவ்வூர்க் குடிகள் மிகவும் வருத்தமடைந்து, அச்சிங்கத்தினாலுண்டாகும் சேதங்களை நிறுத்தும்பொ

ருட்டு அதை வேட்டையாடிக் கொல்லவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அப்படியே அவர்களில் சில வேட்டைக்காரர் புறப்பட்டுப் போய் அச்சிங்கத்தை எங்கும் தேடிப்பார்த்தபோது அது ஒரு புதருக்குள் ஒளித்திருந்ததைக் கண்டு, தூரத்தில் நின்று கொண்டு அதன்மேல் வெடிகளைப் பிரயோகித்தார்கள். அப்போது சிங்கமானது தன் ஒளிப்பிடத்தினின்று வெளியே பாய்கையில், அதன்மேல் ஒரு குண்டுபட்டு அது கீழே விழுந்தது. அப்படி அது விழுந்தும் குண்டுபட்ட காயம் சொல்பமாயிருந்தபடியால் சிங்கம் வெகு மூர்க்கத்தோடு கெர்ச்சித்துக்கொண்டிருந்தது. ஆகையால் அதற்குச் சமீபித்துப்போக ஒருவனும் துணியவில்லை. பின்பு அவ்வேட்டைக்காரர்கள் ஒன்றாகக் கூடி அச்சிங்கத்தை உயிரோடே பிடித்துக்கொள்ளும் வகை ஏதென்று ஆலோசனைசெய்தார்கள். அப்போது விர்த்தாப்பியனாகிய வேட்டைக்காரனொருவன் சொன்ன யோசனை என்னவெனில்: நமது குடிசைகளில் ஒன்றின் மேல்கூரையைமாத்திரம் பிரித்துவிட்டு, மூங்கில் சட்டங்களினால் வட்டமாகக் கோழிக்கூண்டுபோலக் கட்டப்பட்டிருக்கும் குடிசையின் மேற்கோப்பை நாம் அப்படியே எடுத்துச் சுமந்து கொண்டு சிங்கத்திற்குச் சமீபித்துப்போய், அதை அதன்மேல் வலைபோல விசிறியெறியவேண்டும். அப்போது கூண்டுக்குள் அகப்படும் சிங்கத்தை நாம் இலகுவாய்ப் பிடித்துக்கொள்ளலாம். ஒருவேளை நாம் அதற்குச் சமீபித்துப்போகையில் அது நம்மேல் பாய எத்தனிக்குமானால், நாம் செய்யவேண்டியதென்னவெனில், அம்மேல்கோப்புக்கூண்டை நம்மேல்தானே போட்டுக்கொண்டு, அதிலுள்ள சந்துக்களின்வழியாய் நமது வெடிகளைப் பிரயோகித்து சிங்கத்தைச் சுட்டுக் கொன்றுபோடவேண்டுமென்றான். இதைக்கேட்ட ஆலோசனைசபையாரெல்லாரும் அது மிக நல்ல யோசனையென்று மெச்சி சந்தோஷப்பட்டு அப்படியே செய்ய உடனே புறப்பட்டுப்போய், ஓர் குடிசையின் மேற்கூரையைப் பிரித்துவிட்டு மூங்கில் சட்டக் கூண்டை எடுத்துக்கொண்டு மிகுந்த ஊக்கத்தோடு சிங்கமிருக்கும் திசையைநோக்கிச் சென்றார்கள். அவர்கள் அதற்குச் சமீபமாய் வந்தபோது, அது வெகு பயங்கரமாய்க் கெர்ச்சித்துத் தங்கள்மேல் பாய எத்தனிக்கிறாப்போல் தோன்றினதினால் அவர்கள் பயந்து கிடுகலங்கி, தங்களைக் காப்பாற்றிக்கொள்வதே பிரதானகாரியமென்று யோசித்து, தங்கள்

மேலேதானே அக்கூண்டை கவிழ்த்துக்கொள்ள எத்தனித்தார்கள். ஆனால் அவர்கள் அப்படிச்செய்து முடிக்குமுன்னமே சிங்கமானது மின்னலைப்போல ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து கூண்டுக்குள் விழுந்துவிட்டது. ஆகவே சிங்கமும், அதை வேட்டையாடப்போன வேட்டைக்காரரும் ஒன்றாக அக்கூண்டுக்குள் அகப்பட்டார்கள். சிங்கமானது தன்னிஷ்டப்படி சாவகாசமாய் வேட்டைக்காரர்களை ஒவ்வொருவனாகக் கொன்றுதின்னத் தலைப்பட்டது. இப்பரிதாபமான காட்சியைக்கண்ட தூமசேனகிராமத்துக் குடிகள் சொல்லிமுடியாத ஆச்சரியத்தையும் துக்கத்தையுமடைந்தார்கள். இதனால் இந்நாள்வரைக்கும் தூமசேன கிராமத்தின் குடிகளில் ஒருவனைப்பார்த்து, சிங்கத்தை உயிரோடே பிடிக்கிறவனென்று சொன்னால், அதைப்போல அவனைக் கோபமூட்டத்தக்க சொல் வேறொன்றுமிராது என்றான். இக்கதையைப் பார்க்கென்பவரும் அவரோடேகூட வந்திருந்தவர்களும் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு சிரித்தார்கள்.

டிசெம்பர்மீ 3வ காலையில் மேஸ்டர் பார்க்கென்பவர் தம்மை வழிவிட்டனுப்பவந்த டாக்டர் லேயிட்லி முதலாகிய ஐரோப்பிய சிநேகிதரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பிரயாணப்பட்டார். இப்படி அவர் பிரயாணப்பட்டுப் போகையில் முதலாவது அவர் ஓர் விஸ்தாரமான ஆரணியத்தின் வழியாகப் போகவேண்டியதாயிருந்தது. அவ்வாரணியத்திலிருக்கும் நாடுகளிலுள்ள குடிகளெல்லாம் நாகரீகமற்ற பாமரஜனங்கள். அவர்களுக்கு ஓர் வெள்ளைமனிதன் பெரிய அதிசயமான காட்சி. அச்சனங்கள் எப்போதாகிலும் ஐரோப்பிய பிரயாணி ஒருவனைக் கண்டால், அவனிடத்திலுள்ள பொருட்களைப் பறித்துக்கொள்ளவும், அவனுக்குப் பலவித இடையூறுகளை உண்டுபண்ணவும் துணிவார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் வாசம்பண்ணும் பிராந்தியங்களில் தனிமையாய் நெடும்பிரயாணஞ்செய்வது வெகு மோசமான காரியமேயல்லாது வேறல்ல. இப்படி பார்க்கென்பவர் அவ்வாரணியத்தின் வழியாய்ப் பிரயாணஞ்செய்கையில், தம் மோசமான நிலைமையைக்குறித்துச் சிந்தித்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில்தானே சில ஆபிரிக்கானர்கள் கூட்டமாக வந்து அவரைத் தடுத்து, அவரை நோக்கி: ஒன்று நீ பெக்காபா என்னும் ஊருக்கு எங்களோடே வந்து அவ்விடத்தில் உவாலிநாட்

டர்சனைக் காணவேண்டும்; அல்லது இந்நாட்டுச் சட்டபடி நீ கொடுக்கவேண்டிய வரிப்பணத்தை எங்களிடத்தில் கொடுத்துத் தீர்க்கவேண்டுமென்று சொன்னார்கள். மேஸ்டர் பார்க்கென்பவர் இதுகாரியத்தை யோசித்துப்பார்த்து, அவர்களை எதிர்ப்பது விவேகமல்லவென்று நினைத்து, அவர்கள் இஷ்டப்படிக்கு அவர்களிடத்தில் ராஜனுடைய பொக்கிஷத்திற்கென்று முன்சொல்லப்பட்ட இரும்புப்பாளக் கணக்கின்படி நாலுபாளப் புகையிலையை வரிப்பணமாகக் கொடுத்தார். பின்பு அவர் பிரயாணப்பட்டு கூற்றக்கொண்டா என்னும் பட்டணத்திற்குச் சமீபத்திலுள்ள ஓர் கிராமத்தில் போய்ச்சேர்ந்தார். டிசெம்பர்மீ 4வ உவாலி ராஜ்ஜியத்தின் கடைசிப் பட்டணமாகிய இவ்விடத்தை விட்டுக் கடந்துபோனார். அதைவிட்டுப் புறப்படுமுன் வழக்கமான வரிப்பணத்தைச் செலுத்தினர். டிசெம்பர்மீ 5வ உவாலி ராஜன் வசிக்கும் ராஜதானியாகிய மெதினு என்னும் பட்டணத்தைச்சேர்ந்தார். உவாலிராஜ்ஜியத்தில் எங்கும் விஸ்தாரமும் அடர்த்தியுமான காடுகள் உண்டு. அந்நாட்டிலுள்ள பட்டணங்கள் ஆரணியங்களுக்கு மத்தியிலிருக்கும் பள்ளத்தாக்குகளில் கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பட்டணத்தைச் சுற்றியும் குடிகள் பயிரிட்டு ஜீவனஞ்செய்யும் நிலங்களிருக்கும். இன்னிலங்களின் விளைவு குடிகளின் ஜீவனார்த்தத்துக்குப் போதுமானது. அவைகளில் பயிராகும் பொருள்கள் பருத்தி, புகையிலை, தானியங்கள் முதலியவைகளே.

காம்பியா நதிக்கரையிலிருந்து உள்நாடுகளுக்குப் போகும் பிரயாணிகள் அந்தந்த நாட்டிலுள்ள அரசர்களுக்கு ஐரோப்பிய வர்த்தகச் சரக்குகளைத் தீர்வைப்பணமாகக் கொடுத்து, அவர்கள் அவ்விடங்களைவிட்டுத் திரும்பிவருகையில் அவ்வரசர்களுக்கு இரும்புபாளங்களைத் தீர்வையாகச் செலுத்துவார்கள். இவ்வித வரிகள் பட்டணங்கள்தோறும் வாங்கப்படும். உவாலிராஜ்ஜியத்தின் ராஜதானியாகிய மெதினு என்னும் பட்டணம் மிக விஸ்தாரமானது. அதில் ஏறக்குறைய 1000 வீடுகள் உண்டு. அது மற்ற ஆபிரிக்கானரின் பட்டணங்களைப்போலவே களிமண்ணினால் கட்டப்பட்ட உயர்ந்த சுவரினாலும், இச்சுவருக்கு வெளியே பூமியில் நாட்டப்பட்ட கூரான கொம்புகளும், முட்புதர்களுமுள்ள ஒரு வேலியினாலும் சூழப்பட்டிருந்தது. ஆபி

ரிக்காவிலுள்ள ராஜதானிக் கோட்டைகளுக்கு மேற்கூறியவித மான மண்சுவரும் வேலியுந்தான் பாதுகாப்புக் கொத்தளங்களாம். மேஸ்டர் பார்க்கென்பவர் போனகாலத்தில் செதினு ராஜதானியின் சுவர்கள் அரசனின் கவலையீனத்தினுல் வெகுவாய் இடிந்து தகர்ந்திருந்தன. வெளிவேலியும் வெகுவாய் அழிந்துகிடந்தது. ஊரிலுள்ள ஸ்திரீகள் நாள்தோறும் அடுப்பு விறகுக்காக வேலியிலுள்ள கொம்புகளை முறித்துக்கொண்டுபோனுர்கள். மேஸ்டர் பார்க்கென்பவர் இவ்விராஜதானிக்குவந்து; அவ்விடத்தில் ராஜனுடைய பந்துக்களில் ஒருவனுடைய வீட்டில் தங்கியிருந்தார். அவன் அன்று இராத்திரி பார்க்கென்பவரைப்பார்த்து, தான் அவரை மறுநாள் ராஜனுடைய சமுகத்தில் ராஜபேட்டிக்கு இட்டுக்கொண்டுபோக உத்தேசித்திருக்கிறதாகவும், அச்சமயத்தில் அவர் ஐரோப்பியர் வழக்கப்படி ராஜனுக்குக் கைகொடுக்கக் கூடாதென்றும், அப்படிச்செய்வது அரசனுக்குக் கனயீனமான காரியமென்றும் எச்சரித்தான். அப்படியே மறுநாள் சாயரட்சை மேஸ்டர் பார்க்கென்பவர் அரசனுக்கு மரியாதை செலுத்தவும் அவருடைய ராஜ்ஜியத்தின் வழியாகத் தாம் பிரயாணம்பண்ணுவதற்கு அநுமதிபெற்றுக்கொள்ளவும் போனுர். அவ்வாசனுடைய பெயர் ஜாட்டா. இவர் கனம்பொருந்திய விருத்தாப்பியமுள்ள மனிதன். மேஸ்டர் பார்க்கென்பவர் அவ்வாசனைப்பார்க்கப் போனபொழுது, அவர் தம் குடிசையின் வாசலுக்கு முன்னே ஓர் பாயின்மேல் உட்கார்ந்துகொண்டிருந்தார். இருபக்கத்திலும் அநேக மனிதர்களும் ஸ்திரீகளும் வரிசையாய் உட்கார்ந்து பாடிக்கொண்டும் கைகொட்டிக்கொண்டுமிருந்தார்கள். மேஸ்டர் பார்க்கென்பவர் அரசன் சமுகத்துக்குமுன் போய் வெகு பணிவோடு அவருக்கு மரியாதைசெலுத்திவிட்டு, தாம் வந்த நோக்கத்தை அவருக்குத் தெரியப்படுத்தினுர். அரசன் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு, அவர் செய்த மனுவுக்குப் பிரத்தியுத்தரமாக: தம்முடைய ராஜ்ஜியத்தின் வழியாய் அவர் யாதொரு ஆட்சேபமின்றிப் பிரயாணம்பண்ணலாமென்று உத்தரவு கொடுத்ததுமன்றி, அவர் செய்யும் பிரயாணங்களில் அவருக்கு யாதொரு மோசம், சேதம் நேரிடாதபடிக்குத் தாம் கடவுளை நோக்கிப் பிரார்த்திப்பதாக வெகு தயவுடன் சொன்னுர். அப்பால் அங்கிருந்தவர்களில் ஒருவன் அரபிபாஷையிலுள்ள ஓர்

பாட்டைப் பாடினுன். பாட்டின் ஒவ்வொரு சீரின் முடிவில் ராஜனும் மற்றும் அவ்விடத்திலுள்ள ஜனங்களும் தங்கள் கைகளை நெற்றியில் அடித்துக்கொண்டு வெகு பக்திவினயத்துடன் அப்படியாவதாகவென்று சத்தமிட்டுக் கூறினுர்கள். மேலும் அவ்வாசன் மேஸ்டர் பார்க்கென்பவரைப்பார்த்துத் தம்முடைய ராஜ்ஜியத்தின் அந்தம்வரைக்கும் அவரை நடத்திக்கொண்டு போகத்தக்க ஒரு வழிகாட்டியைத் தாம் திட்டஞ்செய்து மறுநாள் அவருடனே அனுப்புவதாக வாக்குப்பகிர்ந்தார். டிசெம்பர்மீ 6௳ மேஸ்டர் பார்க்கென்பவர் அவ்வழிகாட்டி ஆயத்தமாயிருக்கிறுனேவென்று விசாரிக்கும்பொருட்டு ராஜனுடைய குடிசைக்குப் போனபோது, அவர் ஒரு மாட்டுத்தோலின்பேரில் உட்கார்ந்து நெருப்புமூட்டம்போட்டு குளிர்காய்ந்துகொண்டிருந்தார். அப்போது அரசன் பார்க்கென்பவரைப் பார்த்து: நீர் ஆபிரிக்காகண்டத்தின் உள்பிராந்தியங்களில் பிரயாணஞ்செய்யவேண்டுமென்று எண்ணியிருக்கும் நோக்கத்தை விட்டுவிடுவது நலமாயிருக்கும். கொஞ்சக்காலத்திற்குமுன் மேஜர் ஒளட்டன் என்பவர் இவ்விதமாகவே ஆபிரிக்காவில் பிரயாணஞ்செய்தபோது அவர் சுதேசிகளால் கொலையுண்டார். நீரும் என் சொற்படி கேளாமல் இக்கண்டத்தில் பிரயாணஞ்செய்வீராகில் உமக்கும் அவ்வித மோசங்கள் சம்பவிக்குமென்று வெகுபட்சத்தோடு புத்தி சொன்னுர். இதையெல்லாம் பார்க்கென்பவர் கேட்டு, ராஜன் தம்மிடத்தில் பாராட்டின உரித்தான பட்சத்திற்காக அவருக்கு மிகவும் நன்றியறியுதலைக் காட்டிவிட்டு, தாம் எவ்வித மோசங்களுக்கும் உட்பட ஆயத்தப்பட்டிருப்பதாகவும், எதற்கும் பயப்படாமல் தாம் கொண்ட நோக்கத்தை எவ்விதத்திலும் நிறைவேற்றவே தாம் கருதியிருப்பதாகவும் வெளியிட்டார். அதற்கு ராஜன் தம் தலையைமாத்திரம் ஆட்டிவிட்டு ஒன்றுஞ்சொல்லாமலிருந்துவிட்டார்.

கடைசியில் அன்றுபகல் இரண்டுமணிக்கு அவ்வழிகாட்டி வந்து சேர்ந்தான். அதன்மேல் மேஸ்டர் பார்க்கென்பவர் அந்த நல்ல விர்த்தாப்பிய ராஜனிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார். புறப்பட்ட மூன்றுமணி நேரத்துக்குள் கோன்ஜோர் என்னும் ஓர் சிறு கிராமத்தில் போய்ச் சேர்ந்து அவ்விடத்திலே அன்று இராத்தங்கினுர். அவர் அக்கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்தவு

டனே சில பாசிமணிகளைக்கொடுத்து ஓர் நேர்த்தியான ஆட்டை விலைக்குவாங்கி, அதை அடித்து அதில் ஓர் பாகத்தை அன்று இராச்சாப்பாட்டுக்குச் சமைத்துவைக்கும்படி தம்முடைய வேலைக்காரர்களுக்கு உத்தரவுசெய்தார்.

டிசெம்பர்மீ 11வ மேஸ்டர் பார்க்கென்பவர் உவாலிராஜ்ஜியத்தின் எல்கைப்பட்டணமாகிய கூஜாரென்னும் இடத்திற் போய்ச் சேர்ந்தார். அம்மட்டும் அவருடன் கூடவந்த வழிகாட்டியானவன் தன் பிரயாசத்திற்குக் கூலியாகக் கொஞ்சம் அம்பரை அவரிடத்தில் பெற்றுக்கொண்டு தன் ஊருக்குத் திரும்பிவிட்டான். அவர் இனித் தாம் போகவேண்டிய ஆரணியத்தில் தண்ணீர் அகப்படுகிறது மிகப் பிரயாசையென்று கேள்விப்பட்டதினால், தமக்கு வழிகாட்டுவதற்கும் தண்ணீர் சுமந்துவருவதற்கும் உதவத்தக்க சில ஆட்களைத் தேடினார். தேடினதில் யானைவேட்டைக்காரர்களாகிய மூன்று நீகரோஜாதிமனிதர்கள் அவரிடத்தில் வந்து தாங்கள் அவருக்கு வழிகாட்டிகளாகவும் தண்ணீர் சுமப்பவர்களாகவும் இருப்பதாகச் சொல்லி, தங்களை அவர் தம் வேலைக்கு அமர்த்திக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அப்படியே அவர் அவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு மூன்று நாள் சம்பளத்தை முன்னதாகவே கொடுத்துவிட்டார். கூஜார் என்னும் பட்டணத்திலுள்ள ஜனங்கள் பார்க்கென்பவரை மிகுந்த அதிசயத்தோடு பார்க்கவந்து, அவர் பாண்டாங் என்னும் தங்கள் நகரச்சாவடிக்கு வந்து, அவ்விடத்தில் அன்று சாயந்தரம் நடக்கப்போகும் வேடிக்கை மல்யுத்தத்தைப் பார்க்கவேண்டுமென்று அவரை மிகவும் விரும்பி அழைத்தார்கள். அப்பிரகாரம் அவர் அவ்விடத்திற்குப் போயிருந்தார். இவ்வித வேடிக்கை மல்யுத்தங்கள் மாண்டிங்கோ நாடுகளிலெல்லாம் சாதாரணமாய் நடக்கிறதுண்டு. இச்சமயங்களில் ஜனங்கள் சூழ்ந்து வட்டமாக நிற்க, பலமும் எவ்வனமும் பொருந்திய மல்வித்தைக்காரர்கள் மத்தியிலுள்ள காலியானவிடத்தில் நின்று, வெகு ஆரவாரத்துடன் யுத்தஞ்செய்வார்கள். இவர்கள் முதலாவது தங்கள் வஸ்திரங்களைக் களைந்துவைத்துவிட்டு, ஒட்டுச்சல்லடங்களைத் தரித்துக்கொண்டு, தங்கள் தேகமெங்கும் எண்ணெயை அல்லது ஓர்விதக் கொழுப்பைப் பூசிக்கொண்டு யுத்தகளத்தில் வந்துநிற்பார்கள். அவர்கள் அநேகவிதமான தந்திரோபாயங்களைப் பிரயோகித்து,

பார்க்கிறவர்கள் அதிசயிக்கத்தக்கவண்ணமாய் ஒருவரோடொருவர் வெகு வேடிக்கையாய் யுத்தஞ்செய்வார்கள். இவ்வித சண்டைகளில் அதிக பலத்தைக் காட்டினவனே வெற்றிசிறந்தவன் என்றெண்ணப்படுவான். மேஸ்டர் பார்க்கென்பவர் போய்ப் பார்த்த அந்த யுத்தத்தில் வெற்றியடைந்த மனிதன் மகா பலம் பொருந்தியவனுயிருந்தான். அவனுடன் வெகு சொல்ப ஐரோப்பியர்தான் யுத்தஞ்செய்து அவனை வெல்லக்கூடுமென்று பார்க்கென்பவர் நினைத்தார். இப்படி யுத்தவீரர்கள் யுத்தஞ்செய்யும் சமயங்களில் ஓர்விதத் தப்பட்டைகளைக் கொட்டி முழக்கி அவர்களை உச்சாகப்படுத்துவார்கள். யுத்தம் முடிந்தவுடனே போர் செய்தவர்களும், சூழநின்றவர்களிற் சிலரும் ஒன்றுகச் சேர்ந்து, கைகளிலும் கால்களிலுஞ் சலங்கைகளைக் கட்டிக்கொண்டு வெகு உல்லாசக் களிப்போடு கூத்தாடி நடனஞ்செய்து பொழுதுபோக்குவார்கள். இவ்வாறு மல்வேடிக்கையிலும் நடன உல்லாசத்திலும் அன்று மாலை மயங்கிப்போனபின்பு, ஓர்வித மதுபானம் ஜனங்களுக்குப் பரிமாறப்பட அவர்களெல்லாரும் அதை உட்கொண்டு சந்தோஷங்கொண்டாடினுர்கள்.

மறுநாளாகிய டிசெம்பர்மீ 12உ பார்க்கென்பவர் அமர்த்தியிருந்த யானைவேட்டைக்காரர்கள் மூன்றுபேரில் ஒருவன் தான் முன்னதாக அவரிடம் வாங்கின பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிப்போய்விட்டான். மற்ற இருவரும் அப்படிச் செய்யாதபடிக்குப் பார்க்கென்பவர் அவ்விடத்தில் பின்னும் சற்றென்கிலும் தாமதியாமல் அவர்களைத் துரிதப்படுத்திச் சுரக்குடுக்கைகள் முதலான பாத்திரங்களில் தண்ணீர் கொண்டுவரும்படி செய்து உடனே அவர்களுடன் பிரயாணப்பட்டார். இப்படி அவர் புறப்பட்டு அப்பிராந்தியங்களிலுள்ள சுதேசிகளால் நீமடேபா என்று அழைக்கப்படும் ஓர் பெரிய விருட்சம் இருக்கும் இடமட்டும் தம்முடைய ஆட்களுடன் வெகு துரிதமாய்ப் பிரயாணஞ் செய்தார். இந்த விருட்சம் மகா விநோதகோலமுள்ளதாயிருந்தது. எப்படியெனில், அவ்வனுந்தரவழியாய்ப் பிரயாணஞ்செய்கிற பாட்டைசாரிகள் யாவரும் அம்மரத்தண்டை வந்தவுடனே தங்கள் வஸ்திரத்தில் ஓர் சிறு துண்டைக் கிழித்து அக்கந்தையை அம்மரத்தின் கிளைகளில் கட்டுகிற வழக்கமுண்டு. இதனுல் அம்மரமுழுமையும் கந்தைத்துணிகளால் நிறைந்திருந்தது. இவ்வி

நோதமான வழக்கத்திற்குக் காரணம் யாதெனில், அவ்விருட்சத்திற்குச் சமீபமான ஓரிடத்தில் தண்ணீர்மடு ஒன்றுண்டு. ஆகையால் ஜலம் அபூர்வமான அவ்வனாந்தரவழியாய் ஆதியில் பிரயாணம்பண்ணினவர்கள் அம்மடுவைக் கண்டவுடனே சந்தோஷப்பட்டுத் தண்ணீர் அள்ளிக் குடித்தபின்பு, அவ்விருட்சத்தண்டை வந்து இளைப்பாறிவிட்டு தங்களுக்குப்பின் அவ்வழியாய்ப் பிரயாணம்பண்ணும் ஜனங்கள் அம்மரத்திற்குக் கொஞ்சதூரத்துக்குள் ஓர் தண்ணீர்மடு இருக்கிறதென்று அறிந்துகொள்ளும்பொருட்டாகத் தங்கள் வஸ்திரத்தில் ஓர் துண்டைக் கிழித்து விருட்சத்தின் கிளைகளில் கட்டிவைக்கிற வழக்கமிருந்தது. பின்பு இப்படிச் செய்வது பெருவழக்கமாகி, அவ்வழியாய்ப் போகிற ஒவ்வொருவனும் அவ்விருட்சத்தில் ஒரு கந்தைத்துணியை கட்டிவைக்காமல் போகிறதேயில்லை. ஆகையால் பார்க்கென்பவரும் அவ்வழக்கத்தை அநுசரித்துத் தம்மிடத்திலிருந்த ஓர் நேர்த்தியான துணியை எடுத்து விருட்சத்தின் கிளைகள் ஒன்றில் கட்டிவிட்டு, அதற்குச் சமீபத்தில் இருப்பதாகத் தாம் கேள்விப்பட்ட தண்ணீர்மடுவைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி தம்முடன் வந்த யானைவேட்டைக்காரர்களில் ஒருவனை அனுப்பினார். அப்படியே அவன் போய் அதைக் கண்டுபிடித்தான். ஆனால் அதிலுள்ள ஜலம் மிகவும் சேர் நிறைந்து கலங்கலாயிருந்தது. அம்மடுவைப் பார்க்கப்போன நீகரோ மனுஷன் அதன் கரையோரத்தில் கொள்ளிக்கட்டைகளும் உணவுபதார்த்தத் துண்டுகளும் கிடக்கக்கண்டு திரும்பிவந்து இது காரியங்களைப் பார்க்கென்பவரிடத்தில் தெரியப்படுத்தினான். அவர் அதைக் கேட்டு சமீபகாலத்தில் பிரயாணக்காரர்களோ அல்லது கள்ளர்கூட்டங்களோ அம்மடுவண்டை வந்திருந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்கள் கள்ளர்களேயானால் நம்முடைய முன்தீர்மானப்படி நாம் அம்மடுவண்டை இராத்தங்குகிறது யுக்தமல்ல. ஆகையால் நாம் இவ்விடத்தை விட்டுத் துரிதமாய்ச் சென்று வேறொரு தண்ணீர்த்துரவண்டை போய்த் தங்குவதே நலமென்று சொல்லிப் புறப்பட்டார். அப்படியே அவர்கள் அன்று இராத்திரி 8 மணிவரைக்கும் பிரயாணம்பண்ணி, தண்ணீருள்ள ஓரிடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். அவ்விடத்தில் அவர்கள் நெருப்பையுண்டாக்கி, தங்களோடு கொண்டுவந்த ஜீவஜந்துக்களைச் சூழ வைத்துக்கொண்டு தாங்கள் மத்தியில் வெறுந் தரையின்

பேரில் படுத்துக்கொண்டார்கள். அவர்கள் இப்படிப் படுத்திருக்கையில் கள்ளர்கள் திடீரென்று வந்து அவர்கள்மேல் விழாதபடிக்கு நீகரோ வேலையாட்கள் தங்களுக்குள் முறைவைத்து அம்முறைப்படி விழித்திருந்து காத்துக்கொண்டிருந்தார்கள். மறுநாள் பொழுதுவிடிந்தவுடனே அவர்கள் தங்கள் தோல்துருத்திகளிலும், சுரக்குடுக்கைகளிலும் தண்ணீர் நிரப்பிக்கொண்டு பாண்டோநாட்டின் முதல் பட்டணமாகிய டாலிக்கா என்னுமிடத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். இப்பட்டணத்தில் அவர்கள் டிசெம்பர்மீ 12உ போய்ச் சேர்ந்தார்கள்.

பார்க்கென்பவர் இதுவரைக்கும் பிரயாணம்பண்ணின இடங்களிலெல்லாம் சுதேசிகள் அவரைப் பட்சத்தோடு ஏற்றுக்கொண்டு அவரைச் சிநேகவாஞ்சையாய் உபசரித்துவந்தார்கள். போஜனமுதலியவற்றைப்பற்றிய ஆபிரிக்கானருடைய வழக்கங்கள் பார்க்கென்பவருக்கு முந்தி வெறுப்பாயிருந்தபோதிலும், வரவர அப்பியாசத்தினால் அவ்வெறுப்பு நீங்கிப்போக சகலமும் அவருக்கு இன்பமாகிவிட்டது.

## சக்கிலியும் வர்த்தகனும்.

பூர்வத்தில் ஓர் சக்கிலியிருந்தான்: அவன் நாடோறுங் காலைமுதல் மாலைவரையினும் உழைத்துப் பாடுபடுகிறவனாயிருந்தும், தன் ஸ்திதியில் மனரம்மியமுள்ளவனாய் எப்பொழுதும் சந்தோஷத்துடன் பாடிக்கொண்டு காலங்கழித்துவருகிறவனாயிருந்தான். இவனுக்கு அடுத்த வீட்டிலோ திரண்ட ஐசுவரியமுள்ள வர்த்தகனொருவனிருந்தான்: இவன் இராப்பகல் பணயேக்கமும் கவலையுங்கொண்டு, மனஅமைதலைப் பறிகொடுத்து, பொருள்சேர்க்கும் வகையையே சிந்தித்துக்கொண்டிருந்தான். ஒருநாள் இவ்விரண்டுபேரும் ஒருவரையொருவர் சந்திக்கும்படி நேரிட்டது. அப்போது வர்த்தகன் சக்கிலியைப்பார்த்து: ஆ, என் நல்ல சிநேகிதனே! நீ படும்பாட்டினால் வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு பணம் சம்பாதிப்பாயென்று கேட்க, சக்கிலி சிரித்துக்கொண்டு, ஐயா! வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு சம்பாதிப்பாயென்று கேட்கிறீர்? அவ்விதக் கணக்கு எனக்குத் தெரியாது. அன்றாடகம்

உழைத்து அன்றாடகஞ் சாப்பிட்டுவருகிறேன். இவ்விதமாய் நான் காலந்தள்ளிவர எப்படியோ வருஷமும் முடிந்துபோகிறது. வருஷம் ஒன்றிற்கு எனக்ககப்படுகிறது இவ்வளவென்று நான் பார்க்கிறதுமில்லை; எனக்குத் தெரியவுந் தெரியாது. அன்றாடக உழைப்பினால் அன்றாடக போஜனம் நடந்துவருகின்றதென்று மாத்திரம் எனக்குத் தெரியுமென்றான். இதைக்கேட்ட வர்த்தகன் சக்கிலியைப் பார்த்து: அப்படியானால் நாளொன்றுக்குத்தான் எவ்வளவு சம்பாதிப்பாயென்று எனக்குச் சொல்வாயா என்று கேட்க, சக்கிலி: ஐயா! ஒரு நாளைக்குச் சற்று அதிகமாயகப்படும், ஒரு நாளைக்குச் சற்று குறைச்சலாயகப்படும். ஆகிலும் அப்போதைக்கப்போது அகப்படும் வரும்படியைக்கொண்டு நானும் என் சமுசாரமும் ஜீவனம்பண்ணி வருகிறோம் என்றான். அப்போது வர்த்தகன்: நல்லது என் சிநேகிதனே! இனிவருங் காலத்தில் உனக்கு யாதொரு குறைவும் நேரிடாதபடிக்கு உனக்கு இந்த 100 பொன்காசைத் தருகிறேன். நீ இதைப் பத்திரப்படுத்திவைத்து, உனக்கவசியம் நேரிடுங்காலத்தில் நீ அதை உபயோகப்படுத்தலாமென்றான். சக்கிலி அந்த 100 பொன்காசைப் பார்த்தபோது, உலகத்திலுள்ள திரவியத்தையெல்லாம் கண்டதுபோல அவனுக்கிருந்தது. அவன் அந்தப் பணத்தைச் சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டு தன் வீட்டுக்குத் திரும்பிவந்து, அதை வெகு கவலையோடு பத்திரமாய்ப் பூமியில் புதைத்துவைத்தான். அத்துடன் தன் மனச்சமாதானத்தையும் புதைத்துவிட்டான். எப்படியெனில், ஐசுவரியம் அவனை அடுத்த நிமிஷமுதல் அவனுடைய சந்தோஷமும் பாடல்களும் பறந்துபோய்விட்டன. நித்திரை அவன் கண்ணைவிட்டு விலகிக்கொண்டது. தீராக்கவலை, சந்தேகம், வீண்பயம் முதலியவை அவன் மனதைப் பிடித்து அரித்துக்கொண்டேயிருந்தன. இதனால் பகல்முழுவதும் அவன் கண் புதையலிருக்குமிடத்தை நோக்கிக்கொண்டே இருக்கும். இரவிலோ பூனை எலிமுதலியவற்றால் ஏதாகிலும் அரவமுண்டாகுங்கால் அவன் திடுக்கிட்டு எங்கே திருடர்கள் தன் பொக்கிஷத்தை கொள்ளையிட்டுக் கொண்டுபோக வந்திருக்கிறார்களோவென்று சமுசயித்து வெகு திகிலடைந்திருப்பான். இவ்வாறு அவன் வெகுநாளாய் தன் பணத்தினிமித்தம் பெரிய வேதனையடைந்து கொண்டுவந்ததால், அவன் அலுத்துப்போய் தன் முன்னிலைமை

யையும் பின்னிலைமையையும் ஒத்துப்பார்த்து, தன்னிடத்தில் ஐசுவரியம் வந்ததோடு தனக்கிருந்த மனச்சமாதானமுஞ் சந்தோஷமும் நீங்கிவிட்டனவென்றுணர்ந்து, உடனே தன் அயல்வீட்டுக்காரனாகிய ஐசுவரியமுள்ள வர்த்தகனிடத்தில் ஓடிப்போய், ஐயா! நான் பட்டபாடு போதும், நீர் கொடுத்த 100 பொன்காசையும் திரும்பக் கொடுத்துவிடுகிறேன், அதை நீரே வைத்துக் கொள்ளும், நீர் என்னிடத்திலிருந்தெடுத்துக்கொண்ட நித்திரையையும் மனரம்மியத்தையுமாத்திரம் எனக்குத் திரும்பக் கொடுத்துவிடுமென்றான்.

---

# அர்த்தசாஸ்திரம்.

## பண்டமாற்று.

நாம் இதுவரையும் முயற்சி இன்னதென்றும், அது பயன்படச் செய்யும் விதம் இதுவென்றும், அதனாலுண்டாகும் பலன்கள் இவையென்றும், முயற்சிக்கு முக்கிய அநுகூலமான விஷயங்கள் இன்னின்னவென்றும் சொல்லிவந்தோம். ஆயினும் ஒருவனுக்குத் தன் முயற்சியினால் வரும் பலனைத்தவிரப் பிறிதொன்றுங்கிடையாது என்று இருக்குமாகில், அப்பொழுது அவன் என்ன முயற்சிசெய்தாலும் சௌக்கியம் அடையமாட்டான். ஒருவனுடைய சுகவாழ்வுக்கு எத்தனை பொருட்கள் இன்றியமையாதனவாயிருக்கின்றன. அத்தனை பொருட்களையும் ஒருவன் தன் தனி முயற்சியினால் சம்பாதித்தல் அசாத்தியம். ஆதலால் ஒவ்வொருவருக்கும் பிறருடைய முயற்சியின் பலன் எவ்விதத்திலும் இல்லாமல் தீராது. ஆகவே ஒவ்வொருவரும் தம்தம் முயற்சியின் பலனை தம்முள் மாற்றிக்கொள்வதனால் எல்லோர்க்கும் தேவையான எல்லாப்பொருளும் கிடைக்க ஏதுவுண்டு. இப்படி ஒருவர் தம்மிடத்துள்ள ஒரு பொருளைக்கொடுத்து வேறொருவரிடத்துள்ள வேறுபொருளைப் பெற்றுக்கொள்வதைத்தான் பண்டமாற்று என்று சொல்லுகிறது. ஒருவன் எவ்வளவு முயற்சி செய்தாலும் அதனால் எவ்வளவோ அதிகப் பலன் விளைந்தாலும் பண்டமாற்றில்லாவிட்டால் அவனுடைய குறை தீராது. தன் வீட்டுச் செலவுக்கு இருபதுகலன் நெல் போதுமான ஒரு சமுசாரி அதி

கப் பிரயாசப்பட்டு இருநூறுகலன் நெல் விளைவித்தானாகில், தன் செலவுக்குப் போக மீதியான நூற்றெண்பதுகலன் நெல்லைக்கொண்டு தனக்குத் தேவையான வேறு பொருட்களை மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படி மாற்றிக்கொள்ள ஏதுவில்லாவிட்டால், அந்த நெல்லும் அவன் பட்ட பிரயாசமும் வியர்த்தமாகும். அதனால் அவனுக்கு யாதொரு பலனுமில்லாமற் போகிறதுமாத்திரமல்ல. முயற்சிக்கும் பெரிய இடையூறுண்டாகும். அப்படியின்றி மீந்த நெல்லைக்கொண்டு தனக்குத் தேவையான வேறு சில பொருட்களை மாற்றிக்கொள்ள இடமிருந்தால், தன் வாழ்வுக்கு மிகுந்த அநுகூலமும் நாளுக்குநாள் அதிக முயற்சிசெய்வதற்கு ஏதுவுமுண்டாகும். பண்டமாற்றினாலுண்டாகும் நன்மைகள் இவ்வளவு பெருமிதமாயிருப்பதினால் ஒரு தேசத்தில் பண்டமாற்று நடந்தேறுவதற்கு அநுகூலமான வழிவகைகள் எவ்வளவிருக்கிறதோ அவ்வளவிற்குத் தக்கதாகத்தான் அத்தேசத்தின் செல்வமும் செழிப்பும் வாழ்வுமிருக்குமென்று விளங்குகிறது. ஆதலால் பண்டமாற்றுத் தடையின்றி நடந்தேறும்படி நேர்த்தியான ரஸ்தாக்களும் நல்ல துறைமுகங்களும் இல்லாத தேசம் செல்வத்திலோங்கி வளருதல் அரிது. உள்நாட்டில் பல இடங்களிலும் கப்பல் முதலிய மரக்கலங்கள் போக்குவரவு செய்யத்தக்க நதிகளும் கால்வாய்களும் இருக்குமாகில், இவ்விஷயத்தில் அத்தேசத்திற்கு அநேக அநுகூலங்களுண்டென்று சொல்லலாம். ஆதலால் இப்பொழுது பண்டமாற்றின் தன்மையையும் அதன் முக்கிய பிரமாணங்களையும் பற்றிச் சற்றுப் பிரஸ்தாவிப்போம்.

க-வது. மாந்தருடைய சுகவாழ்வுக்கு பண்டமாற்றுந் தொழில் எவ்விதத்திலும் இல்லாமல் தீராதென்பது.

உழைப்பின்றி ஒரு பொருளுக்கும் விலையுண்டாகமாட்டாது. எந்தப் பொருளாயினும் விலைமதிக்கப்படவேண்டுமாகில், அந்தப் பொருளைச் சம்பாதித்ததற்குச் சென்ற செலவை அதாவது அதற்கு அடங்கின பிரயாசத்தைக்கொண்டு, அப்பொருள் விலைமதிக்கப்படுகிறது என்பது யாவர்க்குந் தெரிந்தகாரியமே. நம்மைச் சுற்றிலுமிருக்கிற விலையுடைப் பொருட்களொவ்வொன்றும் யாராவது சிலருடைய பிரயாசத்தின் பலனாயிருக்கிறதேயன்றி, வேறில்லை. தன் பிரயாசத்தினால் ஒரு பொருளுக்கு விலையுண்டாக்கின மனிதனுக்கு அந்தப் பொருளின்பேரில் பாத்தியம் உண்டென்

பதும் அதை அவன் தன்னிஷ்டப்படி உபயோகப்படுத்தலாமென்பதும் யாவரும் ஒத்துக்கொள்ளத்தக்க விஷயமே.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு வேலையின்பேரில் விசேஷ பிரீதியுண்டென்பதும், அதனால் அவரவர் தம்தம் விருப்பப்படி தம்தமக்கிசைந்த வேலையைத் தெரிந்துகொள்ளலாமென்பதும் ஆட்சேபிக்கக் கூடாதகாரியமல்லவா? அவ்வாறே ஒருவன் சமுசாரியாகிறான், ஒருவன் கப்பலோட்டியாகிறான், ஒருவன் வியாபாரியாகிறான், ஒருவன் தொழிலாளியாகிறான். இதெல்லாம் அவரவர் இஷ்டப்படி நடக்கிற காரியமே. இப்படி வெவ்வேறு தொழிற்செய்கிற ஒவ்வொருவரும் தம்தம் வேலையில் பிறத்தியாருக்கில்லாத விசேஷ சாமர்த்தியமடைந்திருக்கிறார்களென்பதும், அதனால் தொழிற்பலன் மிகவும் அதிகரித்து அபரிமிதமான நன்மைகளுண்டாகின்றனவென்பதும், இம்முறையைவிட்டு ஒருவனே பல·தொழில்களையுஞ் செய்கிறதாயிருந்தால் அவ்வளவு பிரயோஜனப்படமாட்டாதென்பதும் முன்னமே காட்டினோம்.

அவ்வாறு ஒவ்வொரு மனுஷனும் ஒவ்வொரு வேலையில் முயன்று ஒவ்வொரு காரியத்தைப் பார்க்கும்போது, அவர்களொவ்வொருவருடைய சௌக்கியத்துக்கும் சுகத்துக்கும் ஆவசியகமான பொருட்கள் ஆயிரக்கணக்காயிருக்கின்றன. அப்படியானால் அவைகளையெல்லாம் எப்படிச் சம்பாதிப்பான். ஒருவன் தான் செய்கிற ஒரே ஒரு தொழிலினால் அப்பொருட்களில் ஒன்றை மாத்திரம் தானே உண்டுபண்ணக்கூடும். ஆதலால் பண்டமாற்று எவ்விதத்திலும் அவசியம் என்று ஏற்படுகிறது. தன்னிடத்துள்ள ஒரு பொருளைக்கொடுத்துத் தனக்குத் தேவையான மற்றத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பொருட்களையும் அவன் சம்பாதிக்கவேண்டும். அப்படிச் செய்வதற்கு அவன் முதலாவது தன் பிரயாசத்தினால் ஒரு பொருளுக்கு ஓர் விலையை உண்டுபண்ணவேண்டும்; அப்புறம் அதைக்கொண்டு தனக்கு வேண்டிய பொருட்களையெல்லாம் மாற்றவேண்டும். இந்தப்பிரகாரஞ் செய்வதினால் ஒவ்வொருவரும் தம்தமக்கிசைந்த தொழிலைச் செய்யவும் தமது சுகவாழ்வுக்குத் தேவையான பொருட்களைச் சம்பாதிக்கவும் இடமுண்டாகிறது.

ஆதலால் நாம் இம்மையில் வாழ்ந்து சுகிப்பதற்கு விளைபொருட்கள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு பண்டமாற்றும் அவ

சியமென்று காண்கிறோம். பண்டமாற்றில்லாவிடின் விளைபொருட்களும் செய்பொருட்களும் எல்லாஞ் சுருங்கிவிடும். இதனாலேதான் நாகரீகமில்லாத மிலேச்சஜனங்களுக்கு யாதொரு சௌக்கியமும் வாழ்வுமுண்டாகிறதில்லை. அவர்களுடைய பூமி எவ்வளவு செழிப்பாயிருந்தபோதிலும் விளைபொருட்கள் அதிகரிக்கக் காணோம். பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோய் மாற்றிக்கொள்ளும்படி நல்ல ரஸ்தாக்களும் வழிகளும் வாய்க்கால்களும் ஒன்றுமில்லாததினாலே அவர்களுக்குள் பொருட்கள் அதிகரிக்கிறதில்லை. பண்டமாற்றுக்கநுகூலமான இவைகளெல்லாம் உண்டாகி நிலைத்திராதவரையில் தேசமானது நாகரீகமடைந்து நல்லவாழ்வநுபவிக்கிறது கூடாதகாரியம்.

எந்தத் தேசத்தில்தான் நமக்கு வேண்டிய எல்லாப் பொருட்களும் பூரணமாய் விளைகின்றன? ஆவசியகமான பொருட்களில் அரைப்பங்காவது விளைவிக்குந் திராணி ஒரு ஜாதியாருக்குமில்லை. ஆதலால் எத்தேசஸ்தர்களுக்கும் பண்டமாற்று இல்லாமல் தீராது. ஒவ்வொரு தேசத்திலும் சிலசில விசேஷ அநுகூலங்களுண்டு. ஒரு தேசத்திலுண்டாகிற சில பொருட்கள் வேறுதேசத்தில் அவ்வாறு உண்டாகமாட்டா. அப்பொருட்கள் யாவர்க்கும் அவசியமானவையாயுமிருக்கலாம். ஆதலால் அந்தந்த தேசத்திலுண்டாகத்தக்க பொருட்களை அதிக ஜாக்கிறதையோடும் பக்குவத்தோடும் மிகுந்த பயன்படச் செய்து, அவற்றைக்கொண்டு மற்ற தேசங்களில் அவ்வாறு உண்டாகப்பட்ட பொருட்களை மாற்றிக்கொள்வது வெகு சுளுவும் மிகுந்த பிரயோஜனமுமாம்.

பண்டமாற்றினாலுண்டாகிற பலன் இவ்வளவு பெரிதாயினும் இதற்கு வரையறையில்லையென்றல்ல. இயல்பாகவே உண்டாகிற பல ஏதுக்களினால் அது தடைபடுகின்றது. திருஷ்டாந்தமாக: ஒருவன் நெற்பயிரிடுகிறான், இன்னொருவன் தானியம் விளைவிக்கிறானென்று வைத்துக்கொள்வோம்; ஒவ்வொருவருக்கும் அவரவர் பயிரிடும் வகையில் தனித்தனி அநுகூலங்களிருக்கின்றன. இருவருக்கும் பிரயோஜனமாக ஒருவர்பொருளை மற்றவர் மாற்றிக்கொள்ளவும் வகையிருக்கிறது. அப்படியிருந்தும் ஒருவன் தன் பொருளுக்கு அதிக விலைகூறுவானாகில், மற்றவன் அந்தப் பொருளுக்கு அவ்வளவு கொடுக்கிறதைவிட அதை நாமே விளை

வித்துக்கொள்ளலாமென்று சொல்லி பண்டமாற்றுந் தொழிலைக் கைவிடுவான்; அல்லது நன்சை பயிரிடுகிறவன் புன்சையையும் கிரயத்துக்கு வாங்கி, தனக்கு வாய்த்திருக்கிற ஊர் முதலிய சில விசேஷ அநுகூலங்களினால் தான் மெத்த சகாயமாய் தானியம் விளைவிக்கக் கூடுமென்று உத்தேசித்து அப்படிச் செய்யத்தொடங்குவானாகில், அப்பொழுதும் பண்டமாற்று நின்றுபோம். இந்தப்பிரகாரம் ஒன்றைக் கொடுத்து ஒன்றை மாற்றுவதைப்பார்க்கிலும், தான் விளைவிக்கிறதில் அதிக நயமுண்டு என்று ஏற்படுகிற விஷயங்களிலெல்லாம் பண்டமாற்று நடந்தேறாது.

ஒரு ஜாதியார் சாகுபடியாகாத ஒரு புதிய தேசத்தைக் கட்டிக்கொள்ளும்போது, முதலாவது அத்தேசத்தில் விளையக்கூடிய சில தானிய காய்கறி பதார்த்தங்களைத்தவிர வேறொன்றுங் கிடையாது. ஆதலால் அவர்கள் தங்களுக்குத் தேவையான மற்றும் பதார்த்தங்களையெல்லாம் தாங்களே பயிரிட்டு உண்டுபண்ணிக் கொள்ளுகிறதைப்பார்க்கிலும், வேறு தேசங்களிலிருந்து வருத்திக்கொள்வதே சுலபமாம். ஆயினும் அவர்களுக்குள் பணமும் வேலைசெய்யத்தக்க ஜனமும் அதிகரிக்க, அவர்களே அநேக பொருட்களை வெகு சுளுவில் செய்துகொள்ள ஆரம்பிப்பார்கள். எந்தப் பொருட்களை விளைவிக்க அல்லது உண்டுபண்ண அத்தேசத்தில் அநுகூலங்கள் அல்லது உபகாரணங்கள் இயல்பாய் அமைந்துகிடக்கின்றனவோ, அந்தப் பொருட்கள் விஷயத்தில் பண்டமாற்று நின்றுபோம். பண்டமாற்றைப்பார்க்கிலும் விளைச்சலைத் தெரிந்துகொள்வதற்கு முக்கிய முகாந்தரம் ஒன்றைப்பார்க்கிலும் மற்றொன்றிலுள்ள நயமேயாம். தானே விளைவிப்பதில் நயமில்லையென்றால், பண்டமாற்றே எப்பொழுதும் நடந்தேறும் என்பதற்குச் சந்தேகமில்லை.

மேற்சொல்லியவைகளினால் பண்டமாற்று மிகவும் அவசியமும் வெகுவிஸ்தீரணமுமான தொழிலென்று ஏற்படுகிறதினால், அத்தொழிலை நடத்துவதற்கு ஜனங்களுக்குள் சிலர் துணியவேண்டுமென்றாகிறது. அப்பொழுதுதான் வினைபகுத்துச் செய்யுமுறையிற் காட்டியபடி காலமுந் தொழிலும் ஆதாயப்படும். தொழிற்பலன் அதிகரிக்கும் ஓர் ஊரில் நூறுகுடும்பங்கள் சமுசாரித்தனம்செய்ய அவர்களுக்குத் தேவையான மற்றப் பொருட்களை இரண்டு மூன்று குடும்பத்தார் அதே வேலையாய்த் திரிந்து பண்ட

மாற்றினால் சம்பாதித்துக்கொண்டு வருவார்களானால், அப்பொழுது மற்றவர்கள் தங்களுக்கு வேண்டிய பொருட்களை வேண்டிய காலத்தில் வேண்டிய அளவு பெற்றுக்கொள்ள இடமிருக்கும். அந்த ஊரிலுள்ள விளைபொருட்களும் மற்ற ஊரிலுள்ள ஜனங்களுக்குப் பயன்படும். ஆதலால் இவ்வித ஒழுங்கு முயற்சியும் சுறுசுறுப்புமுள்ள சகல ஜனங்களுக்கும் மிகுந்த அவசியமும் பிரயோஜனமுமுள்ளதென்று விளங்குகிறது.

இவ்வாறு பண்டமாற்றுத் தொழிலை நடத்துகிறவர்களைத்தான் வர்த்தகர்களென்று சொல்லுகிறது. இந்த வர்த்தகர்கள் மொத்த வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளுமென இருவகைப்படுவர். சில்லறை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளிடத்தில் மொத்தமாய் வாங்கிச் சில்லறையில் விற்கிறதினால் சகலமான ஜனங்களுக்கும் உபயோகப்படுகிறார்கள். மொத்த வியாபாரிகளோ அப்படியல்ல. ஒரு சாக்குச் சருக்கரையை அந்தப்படி ஒரே மொத்தமாய் விற்கலாமேயொழிய, அதைப் பிரித்து பலக்கணக்காக நிறுத்துக்கொடுக்கவேண்டுமோனால் கட்டுப்படியாகாது. அதற்காகச் செல்லுஞ் செலவுக்கும் ஆள்மானத்துக்குமெல்லாஞ்சேர்த்து லாபம் வைத்து விற்கப்போனால் அதிக கிரயம் அடங்கும்; அல்லவென்றால் ஜனங்களும் ஒரு சாக்குச் சருக்கரைவாங்க ஏலாது தட்டழிவார்கள். ஆதலால் இருதிறத்தாருக்கும் பிரயோஜனமாக சில்லறை வியாபாரிகள் நடுநின்று அவரவர்க்குத் தேவையான பொருளை தேவையான அளவு கொடுக்கிறதினால், அவர்கள் தேசத்திற்கு மிகவும் பிரயோஜனமுள்ளவர்களாம். அவ்வாறே மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளால் வருத்தக்கூடாததும் வாங்கக்கூடாததுமான பெருந்தொகையுள்ள மொத்தப் பொருட்களை வெகு சுளுவில் வருத்தி வாங்கி வர்த்தகஞ்செய்வதினால் அவர்களும் தேசத்திற்கு அதிகப் பிரயோஜனமுள்ளவர்களே.

கூடியவரையில் நயமாக வாங்குகிறதும் நயமாக விற்கிறதுமே வியாபாரிகள் லாபமடையத்தக்க நல்ல வழியாம். ஒருவன் எவ்வளவு நயமாக விற்கிறானோ அவனிடத்தில் பற்றுவரவு செய்கிறவர்கள் அவ்வளவு அதிகமாவார்கள். நயத்துக்குத் தக்கபடி விற்பனையாம். ஏற்றுமதி இறக்குமதி செய்கிற மொத்த வியாபாரிகளும், நல்லச்சரக்கு இன்னதென்று தெரிந்துவாங்கி விற்கிற சில்லறை வியாபாரிகளும் ஜனங்களுடைய நன்மையைக் கருதாமற்போனா

லும், தங்களுடைய சொந்த லாபத்தை இச்சித்துத் தங்களாலான மட்டும் சகாயமாய் வாங்கவும் சகாயமாய் விற்கவும் ஏற்படுகிறார்கள். அதனால் சர்வஜனங்களும் பயனடைகிறார்கள்.

இதைப் பார்க்கும்போது வியாபாரிகளுடைய லாபம் ஜனங்களுடைய நன்மையென்றும், ஜனங்களுடைய பிரயோஜனம் வியாபாரிகளுடைய ஆதாயமென்றும் விளங்குகிறது. சில்லறை வியாபாரிகள் செல்வவான்களாவதற்கு அவர்கள் தங்களால் கூடியவரையில் நயமாகக் கொள்முதல்செய்து நயமாக விற்கிறதைத்தவிர வேறுவழியில்லை. அவ்வாறே மொத்த வியாபாரிகளும் திரவியசம்பன்னராய் வாழ்வதற்கு ஓரிடத்தில் மலிவாயிருக்கிறதை குறைச்சலாயிருக்கிற மற்றோரிடத்திற்கு அநுப்பி, அக்குறைச்சல்தீர மெத்த நயமாக விற்கிறதைத்தவிர வேறுவழியில்லையாம். ஆதலால் வியாபாரிகள் தங்கள் வர்த்தகத்தொழிலை உண்மையாயும் கருராயும் நடத்துவார்களானால், அது அவர்களுக்கு லாபமும் ஜனங்களெல்லோருக்கும் பிரயோஜனமுமாய் முடியுமென்று திருஷ்டாந்தமாகிறது.

## ஜெயம்.

சத்துருவைத் தோற்கடித்து வெற்றியடைதல்மாத்திரம் ஜெயமல்ல. எடுத்தகருமம் எதுவாயினும் அதிற் சித்திபெறுவதே ஜெயமாம். வேறுவகையாய்ச் சொல்லில், ஒன்றின் நல்லமுடிவு ஜெயமும், கெட்டிமுடிவு அபஜெயமாம். தொடங்கியகாரியம் நன்மையாய் முடிந்து ஜெயம்பெறுகிறவர்களை யாவரும் புகழுவார்கள். அதில் அபஜெயப்படுகிறவனை ஒருவனும் மதியான். ஆதலால் ஜெயமானது ஒருவனுடைய திராணிக்குச் சாட்சிபத்திரம் போலிருக்கிறது. மத்தியில் என்ன இடையூறுகள், துன்பங்கள், விரோதங்கள் வரினும், அஞ்சாமல் நின்று நினைத்தது முடிக்கும் தீரர்களை வியந்து வாழ்த்தாதவர்கள் யார்? ஒரு விஷயத்தை நன்றாய் ஆலோசித்து உறுதியாய் நிர்ணயஞ்செய்து, நமது ஊக்கத்தையும், ஆசையையும், சிந்தனையையுமெல்லாம் அந்த விஷயத்திற்கு நேராகத் திருப்பிவிட்டால், எடுத்தகாரியம் பாதிக்குமேல் நிறை

வேறியாயிற்று என்று சொல்லலாம். "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார், திண்ணியாராகப் பெறின்."

காரியம் இதுவாயினும், நமது தேசத்தில் "விதியினால் வாழ்வதல் லால் மாந்தர், மதியினாலாவதொன்றில்லை" என்கிற சொல்லை விதி யாகக்கொண்டு, காட்சி அநுபவம் இரண்டிற்கு மாறாக முயற்சி யையும் ஊக்கத்தையும் கைவிட்டுச் சோம்பியிருக்கிறவர்கள் பலரு ருண்டு. மெய்தான், பலவான்கள் எப்பொழுதும் வெற்றியடை யவும், முயற்சியுடையோர் எப்பொழுதும் சித்திபெறவும், நல் லவர்கள் எப்பொழுதும் வாழ்வநுபவிக்கவும் காணோம். அவ் வாறே சோம்பேறிகளெல்லாம் தாழ்வடையவும், துஷ்டர்களெல் லாம் துயரமநுபவிக்கவும் காணோம். அதுகொண்டு பலவான் களுக்கு ஜெயமில்லை என்றும், முயற்சியுடையோர்க்குப் பலனி ல்லையென்றும் ஏற்படுமோ? துஷ்டர்களுக்குத் துன்பமில்லையெ ன்றும், சோம்பேறிகளுக்குத் தாழ்வில்லையென்றுமாகுமா? இ ல்லை. எப்பொழுதும், எல்லோரும் என்கிற விசேஷணத்தினால் ஏகதேசங்களில் முறைபிறழ்ந்துவருமென்றும், அவ்வாறு முறை பிறழினும் அதற்குத் தகுந்த முகாந்தரமுண்டென்றும், அந்தந்த முகாந்தரங்கள் இவையென்று நாம் எப்பொழுதுஞ் சொல்ல ஏதுவில்லாமற்போனாலும், அதனால் முகாந்தரங்கள் இல்லையென் றாகாவென்றும் சித்தாந்தப்படுகின்றதேயொழிய மற்றொன்றி ல்லை. ஒருவன் ஒருதுறையிற் சமர்த்தனாயினும் மற்றொருதுறை யில் ஏப்பியனாயிருக்கலாம். ஒரு சமயத்தில் சரியாய்ச் செய்த வன் இன்னொரு சமயத்தில் யோசனைகுன்றி ஊக்கந்தளர்ந்து பி ழைபடச்செய்யலாம். ஒருகாலத்தில் வாய்த்த ஏதுக்களும் அநு கூலங்களும் பிறவும் மற்றொருகாலத்தில் ஒத்துவாதிருக்கலாம். இவ்வளவேயன்றி அததற்குரிய பலன் அததைச் சேராதென்று ஒருக்காலும் ஏற்படமாட்டாது. கடவுளுடைய நியமங்களெல் லாம் நிலையும் நிருவிகற்பமுமானவைகளாம். நெருப்புக்குச் சுடு தல் இயல்பென்று நியமித்தாரென்றால், நெருப்பு எந்நாளும் சுடும். சூடு அதைவிட்டுப் பிரியப்போகிறதில்லை. தன்னிலும் கனதியான பொருளைத் தாழ்த்தி லேசானதை மிதக்கச்செய்கிறது ஜலத்துக் குச் சுபாவமென்று அமைத்தாராகில், அது எப்பொழுதும் அப்ப டியே நடந்தேறும். ஒருக்காலும் திரியாது. வேப்பமரத்திலே மாங் கனியையும், முட்செடிகளிலே திராட்சப்பழங்களையும் பறிக்க

முடியாது. மூடனிடத்திலே ஞானத்தையும், புலியினிடத்திலே சாந்தத்தையும் காணக்கூடாது. அவ்வாறே முயற்சியுடையோர்க்குச் சித்தியும், பலவான்களுக்கு வெற்றியும், சோம்பேறிகளுக்கு இழிவும், துஷ்டர்களுக்குத் துக்கமும் நிருமிக்கப்பட்டிருக்கின்றன. இது பொதுவிதி. இவ்விதியில்லையென்றால் சகலமும் தாறுமாறாகி உலகம் நடைபெறாதொழியும். ஆதலால் முயற்சிசெய்து சித்திபடையத் தேடுகிறதே இயல்பாம்.

மனிதர்கள் சித்திபெற நாடுகிறவிஷயங்கள் பெரும்பாலும் பொருளீட்டல், புகழ்சம்பாதித்தல், குடும்பவாழ்வைத் தேடல் என்றவைகளாம். இவற்றையடையத்தான் உலகிற் பெரும்பான்மையோர் ஆவலோடு முயலுகிறார்கள். அவர்கள் விரும்பி முயன்றகாரியம் பெரும்பாலும் அவர்களுக்குச் சித்தியாகிறது. ஆனால் நல்லயத்தனங்களைக் கைக்கொண்டு நியாயமான பிரயத்தனங்கள் செய்து யோக்கியமானவழியில் நின்று ஜெயம்பெறுகின்றவர்கள் தான் யாவராலும் புகழ்பெறத்தக்கவர்கள். அவர்கள் அடைகிற புகழ்ச்சிக்கு அவர்கள் பாத்திரரேயன்றி மற்றப்படியல்ல. ஆயினும் புறவிஷயங்களில் ஜெயமடைகிற இவர்களிலும் மேலான புகழ்ச்சிக்குப் பாத்திரரான வேறொருவகை ஜெயவீரருண்டு. அவர்கள் யாரெனில், தங்கள் உள்ளத்தை ஜெயித்து வெற்றியடைந்திருக்கிற வீரர்களாம். இவர்கள்தான் வாழ்வுடையவர்கள். இவர்கள் அடைந்திருக்கிற ஜெயமேஜெயம். தன்னையடக்கித் தனது துர்க்குணத்தையொழித்து, தன்னுடைய ஆசாபாசங்களை நல்வழிப்படுத்தி, உள்ளது போதுமென்று திர்ப்தியடைந்து, ஒழுக்கத்தில் நிலைத்து நிற்கிறவனுக்குச் சமமானவீரன் யார்? உள்ளத்தை அடக்குகிறவன் ஒரு கோட்டையைப் பிடிக்கிறவனிலும் பெரியவன் என்று ஓர் ஞானி சொல்லுகிறார். இதுவிஷயத்தில் அடைகிற ஜெயம் எவ்வளவு சிறியதாயினும், அது ஒருவனுடைய ஆண்மை, தயிரியம், உறுதி, பொறுமை, விரக்தி, விவேகம், புத்தி, ஆலோசனை முதலிய சுகுணங்களுக்கு நல்ல அத்தாட்சியாயிருக்கின்றது. இப்படிப்பட்ட ஜெயவீரர்களுக்குக் கிடைக்கிற பலன் நல்ல சுகம், பலம், ஆறுதல், இன்பம், அமைதி, சந்தோஷ முதலிய அரும்பயனுள்ளனவாம். இவர்களுடைய சுகுதியையுணர்ந்து அதற்குத் தக்கபடி புகழ்வாரைக் காணோமேயென்றால், உலகம் இவர்களை அறியாது. உள்ளத்தில் ஜெயம்பெறுகிறவன்

வாழ்க்கையிற் சுகம் அநுபவிக்கிறவனும். இவர்கள்தான் சமுசாரமாகிய சாகரத்தில் சங்கடப்பட்டு வருந்தாமல் சன்மார்க்கமாகிய புணைமீதேறி சௌக்கியமாய்க் கடந்து செல்லுகிறவர்களாம். இவர்கள்தான் மேன்மையான பொருளை மேன்மையான வழியால் தேடியடைகிற விவேகிகளாம். இவர்கள்தான் தர்மமே ஜெயம் என்னுஞ் சத்தியத்தைத் தலைமேற்கொண்டு சித்தியடைகிற புத்திசாலிகளாம்.

உலகத்தில் ஜெயம்பெறுதல் இயற்கையான பல காரணங்களினால் எல்லோருக்கும் சாத்தியமல்ல. ஆனால் வாழ்க்கையில் ஜெயம்பெறுதல் எவர்க்கும் கூடிய காரியமாம். இந்த விஷயத்தில் எவரும் முயற்சிசெய்யக் கூடும். முயற்சிக்குத் தகுந்த பலனை அடையவும் கூடும். உலகத்தில் சித்திபெற்றவர்கள் வாழ்க்கையில் சித்திபெற்றவர்கள் என்றிவ்விருதிறத்தாரினும் அவரவர் செய்கைக்குரிய பலன்மாத்திரம் அவரவரைச் சாருமேயொழிய, ஒரு செய்கைக்குரியது மற்றொரு செய்கைக்கு ஒருக்காலும் தாவாது. உலகத்தில் சித்திபெற்றவர்களுக்கு அவர்கள் தேடிய பொருளோ, புகழோ, உயர்வோ கிடைக்குமேயொழிய வாழ்க்கையிற் சித்திவாராது. வாழ்க்கையில் சித்திபெற்றவர்களுக்கு மற்றதும் அப்படியே. ஆயினும் வித்தியாசமுண்டு. உலகத்தில் எவ்வளவு ஜெயம்பெற்றோராயினும் வாழ்க்கையில் ஜெயம்பெற்றிலரென்றால் அப்படிப்பட்டவர்கள் பாக்கியசாலிகளல்ல. வாழ்க்கையில் சித்திபெற்றவர்கள் உலகில் சித்திபெறாராயினும் பாக்கியவான்களே. அப்படியானால் உலகம் வாழ்க்கை இவ்விரண்டிலும் சித்திபெற்றவர்கள் குறைவற்ற பாக்கியவான்களென்பதற்குச் சந்தேகமென்ன? எல்லாப் புகழும் எல்லாக் கனமும் அவர்களுக்கேயுரியன.

## வானம்பாடியையும் அதன் குஞ்சுகளையும் பற்றிய கதை.

நெற்பயிர் விளைந்திருந்த வயலில் வானம்பாடியொன்று கூடு கட்டிக் குஞ்சுபொரித்திருந்தது. அவ்வயலிலுள்ள விளைச்சல் அறுப்புக்குப் பக்குவப்பட்டிருந்ததால், குஞ்சுகளுக்குச் சிறகுமு

ளைத்துப் பறக்கச் சக்தியுண்டாகுமுன் அறுப்புக்கெஜமான் விளைச்சலை அறுப்பானாகில் அவைகளுக்கு எங்கே அபாயம் நேரிடப் போகிறதோவென்று தாய்ப்பட்சியானது பயந்து, தன் குஞ்சுகளை அப்புறப்படுத்த எண்ணங்கொண்டு, ஆகாயத்தில் பறக்கும் போதெல்லாம் அவைகளைக் கவனித்துப் பார்த்துக்கொண்டேயிருக்கும். இதுவுமல்லாமல் தான் அவைகளை விட்டுப் பிரிந்திருக்குஞ்சமயத்தில் நடக்குங்காரியங்களைத் தனக்குத் தெரிவிக்கும் படியாயும் குஞ்சுகளுக்குத் திட்டஞ்செய்திருந்தது. அப்படியே அவைகள், தாய் வீடுவந்து சேர்ந்தவுடனே அங்கு நடந்தகாரியங்களையெல்லாம் அறிவிக்கும். ஒருநாள் தாய்ப்பட்சி வெளியில் போயிருந்த சமயத்தில் நிலத்துக்குடையவன் அங்குவந்து, தன் மகனுடனே: நெற்கதிர்களெல்லாம் முத்தித் தலைசாய்ந்துபோனதால், நாளை அதிகாலையில் அறுப்புக்கு ஆட்களை விடவேண்டும்; ஆகையால் நம்முடைய அடுத்த வீட்டுக்காரர்களிடம் போய் எச்சரித்து, நாளைக்கு அறுப்புக்கு வரும்படி திட்டஞ்செய்யவேண்டுமென்று பேசிக்கொண்டிருந்தான். இது சங்கதியைக் குஞ்சுகள், தாய் வீடுவந்தவுடனே குதித்துக்குதித்து விழுந்து தெரிவித்து, தங்களை வேறிடத்திற்கு அப்புறப்படுத்தவேண்டுமென்று வேண்டிக் கொண்டன. இதைக் கேட்ட தாய்ப்பட்சியானது தன் குஞ்சுகளின் பதறுதலை அடக்கி, நீங்கள் பயப்படாதேயுங்கள், எப்பொழுது வயலுக்குடையவன் தன் சிநேகிதர்கள் அடுத்த வீட்டுக்காரர்கள்மேல் நம்பிக்கைவைத்து அறுப்புக்கு எத்தனம்பண்ணினானோ, அப்பொழுதே அவ்வேலை நிறைவேறமாட்டாதென்று நிச்சயுங்கள். நாளையதினம் அறுப்பில்லை; நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். ஆனால் இனி நடக்குங்காரியங்களைமாத்திரந் திட்டமாய் எனக்குஅப்போதைக்கப்போது தெரிவியுங்களென்று சொல்லிவிட்டுத் தன் வழக்கப்படி வெளியே பறந்துபோய்விட்டது. மறுநாள் அதிகாலையில் எஜமான் வயலுக்குவந்து மற்றவர்கள் வருகைக்கு எதிர்பார்த்துக் காத்திருந்தான். இப்படி அவன் வேலை யினக்கேடாகிக் காத்திருக்க, வெயிலேறிப்போயும் அவன் எதிர்பார்த்த ஒருவரும் வராததினால், தன் மகனைப்பார்த்து: அப்பா! நம்முடைய சிநேகிதர்களை நம்பி நாம் மோசம்போய்விட்டோம்; ஆனதால் இனி நீ நமது சொந்த பந்துக்கள் சுற்றத்தார்களிடம் போய், நாளையதினம் நம்முடைய வயலை அறுப்பதற்கு

ஒத்தாசைசெய்ய அவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று சொல்லிவிட்டு வீட்டுக்குத் திரும்பிப்போனான். குஞ்சுகள் இதைக்கேட்டு திகிற்பட்டுத் தங்கள் தாய் வந்தவுடனே அதற்கு அறிவித்தன. தாய் அதைக்கேட்டு, நடந்தசங்கதி இவ்வளவு தானா? இதற்கும் நீங்கள் அஞ்சவேண்டாம். இனத்தார்களும் சுற்றத்தார்களும் ஒருமைப்பட்டு ஒத்தாசைசெய்யார்கள்; ஆகி லும் இனி நடக்குங்காரியங்களை நீங்கள் கவனித்துக்கேட்டு, ஒன் றும் விடாமல் என்னிடம் அறிவியுங்களென்று சொல்லி, வழக்கப் படி தன் வேலையின்பேரில் போய்விட்டது. வயலெஜமான் மூன் றாம்நாள் பொழுதுவிடிந்தவுடனே வயலுக்கு வந்து, சொல்லிய னுப்பின பந்துக்கள் வருகைக்கு வெகுநேரங் காத்திருந்தும், முன் தினவர்கள்போலவே இவர்களும் வாராததினால் அவன் மனக்கி லேசமுற்று, தன் மகனைப்பார்த்து: இனி நீ தாமதியாமல் இரண்டு கருக்கறிவாளைச் சம்பாதித்துவருவாயானால், நாம் இருவருமே துணிந்து நாளை அதிகாலையில் அறுப்பறுத்துப்போடுவோமென்று தீர்மானமாய்ச் சொன்னான். இது சங்கதியைக் குஞ்சுகள் கேட் டிருந்து, தங்கள் தாய் வந்தவுடனே அறிவிக்க, தாய்ப்பட்சி, இனி நாம் இவ்விடத்தில் தாமதித்திருப்பது புத்தியீனம்; தக்ஷணமே நாம் அப்புறப்பட்டுப் போகவேண்டும். ஏனெனில் ஒருவன் எப் பொழுது தான் செய்யவேண்டிய வேலையை இன்னொருவன்பே ரில் நம்பிக்கைவையாமல் தானே செய்துமுடிக்கத் தீர்மானிக்கி றானோ, அப்பொழுதே அது தவறிப்போகாமல் முடிவுபெறுமென் பதற்கு ஐயமில்லையென்று சொல்லி, தன்னிருப்பிடத்திலிருந்த குஞ்சுகளை அப்புறப்படுத்திவிட்டது. மறுநாள் தப்பாமல் தகப் பனும் பிள்ளையுமாகவே அவ்வயலுக்கு வந்து அது முழுமையும் அறுத்து முடித்தார்கள்.

ஒருவன் தான் செய்யவேண்டிய வேலையை மற்றவர்களைக் கொண்டு முடித்துக்கொள்ள விரும்புவது வியர்த்தமும் கைகூடா ததுமான காரியம்.

———»»««———

## சமாசாரம்.

---

வருமானவரி.—சென்ற 1870-ம்ஞு ஏப்பிரல்மீ முதல் நூற்றிற்கு மூன்றே அரைக்கால் வீதம் அதாவது ரூபாய்க்கு ஆறுபை வீதம், வருமானவரி துரைத்தனத்தாருக்குக் கொடுக்கப்பட்டுவந்தது யாவருக்கும் தெரியுமே. இவ்வருஷம் ஏப்பிரல்மீ முதல் கொண்டு இவ்வருமானவரி நூற்றிற்கு ஒன்று வீதம் அல்லது ரூபாய்க்கு இரண்டுபை வீதமாத்திரம் வாங்கப்படும். மேலும் இவ்வருஷத்தில் வருஷமொன்றுக்கு எழுநூற்றைம்பது ரூபாய் வரையில் வருமானமுள்ளவர்களிடத்தில் இவ்வரி கேட்கப்படாது.

---

சென்னபட்டணம் புதுக்கவர்னர்.—நமது கவர்னராகிய நேப்பியர் பிரபு வருகிற வருஷத்தில் தமது அலுவலை விட்டுவிட்டுச் சீமைக்குப் போய்விடுவார். அப்போது அவருக்குப் பதிலாக சீமையிலுள்ள ஜனப்பிரதிநிதி சபையாரைச்சேர்ந்த (Grant Duff.) கிராண்ட் டப் என்னும் துரை சென்னபட்டணம் ராஜதானிக்கு கவர்னராக நியமிக்கப்படுவாரென்று காரியந்தெரிந்த சிலர் உத்தேசிக்கிறார்கள். அவர் இவ்வுயர்ந்த உத்தியோகம் பெற்று நமது தேசத்திற்கு வருவாராகில், ஜனங்களுக்கு அதிக நயம் உண்டாகுமென்று நிச்சயிக்கிறார்கள். இந்தத் துரை, துரைத்தன அநுபவத்தில் தேர்ந்தவராம். ஊக்கமும் பிரயாசமும் உள்ளவராம்.

---

சர்வகலாசங்கம்.—சென்ற மார்ச்சுமீ 31உ ஆகிய வெள்ளிக்கிழமை சாயரக்ஷை சென்னை ராஜதானியிலுள்ள துரைத்தன விருந்துமண்டபத்தில் சர்வகலாசபையார் கூடிவந்து பரிக்ஷைகளில் தேறின வித்தியார்த்திகளுக்குப் பட்டஞ்சூட்டினார்கள். வருஷந்தோறும் நடக்கும் கிரமம் வழுவற நடந்தேறியது. கனம்: உவ். மில்லர் என்னும் போதகர் உபநயசித்தார். இவ்வருஷத்தில் நூதனமாய்ப் பட்டஞ்சூட்டப்பட்டவர்களின் விபரம்.

எம். டி. (M. D.) என்னும் உயர்ந்த வைத்தியசாஸ்திரப்பட்டம் பெற்றவர் ஒருவர். எம். எல். (M. L.) என்னும் உயர்ந்த நியாயசாஸ்திரப் பட்டம்பெற்றவர் ஒருவர். பீ. எல். (B. L.)

என்னும் நியாயசாஸ்திரப் பட்டம்பெற்றவர் ஒருவர். பீ. ஏ. (B. A.) என்னும் பட்டம் பெற்றவர்கள் முப்பத்துமூன்றுபேர்கள். பீ. சீ. இ. (B. C. E.) என்னும் சிற்பசாஸ்திரப் பட்டம் பெற்றவர்கள் இரண்டுபேர்கள்.

---

லண்டன்நகரம்.—இங்கிலான்டு ராஜ்ஜியத்திற்கு ராஜதானியும், உலகத்தில் மகா பெரிய நகரமுமான லண்டன்பட்டணத்தின் பரப்பு 122 சதுரமைல். தற்காலத்தில் அதன் குடித்தொகை 3200,000; வீட்டுத்தொகை 400,778; ஏக்கர் ஒன்றுக்குச் சாசரிக் குடித்தொகை 40; சதுரமைல் ஒன்றுக்கு 25,655; லண்டன்நகரவாசிகளுக்குச் செல்லும் உண்டிக்கணக்கு ஆச்சரியம். 1854-ம௵ குடிகளின் போஜனத்திற்காக விக்கிரயமான மாடு 263,000; ஆடு 1,539,380. 1860-ம௵ விக்கிரயமான மாடு 925,918; கன்று 27,309; ஆடு 1,570,008; பன்றி 26,846.

---

மூட்டுப்பூச்சிக்கு மருந்து.—மிகத்தொந்தரையுள்ள இப்பூச்சிகள் வீட்டிலுள்ள சாமான் தட்டுமுட்டுகளில் பற்றிக்கொள்ளும்போது, அவற்றை நீக்குவது அடிக்கடி வெகு பிரயாசையான காரியமாகையால், கீழே கண்ட மருந்துகளைப் பிரயோகித்தால் அநுகூலமுண்டாகும்.

க. (Oil of Turpentine) ஆயில் ஆப் டர்பென்டைன் என்னும் கர்ப்பூரத் தயிலத்தை மூட்டுப்பூச்சியுள்ள தட்டுமுட்டுகளில் தடவினால் அது உடனே மாண்டுபோம்.

உ. சுண்ணாம்பு, கர்ப்பூரம், பெருங்காயமாகிய இம்மூன்று சரக்குகளையும் கொஞ்சத்தண்ணீரில் சேர்த்து மூட்டுப்பூச்சியுள்ள சாமான்களில் பிரயோகித்தால் பூச்சி மாண்டுபோம்.